நாகர்கோவில் மாநகராட்சியில் சீரான குடிநீர் விநியோகம் - அரசு நடவடிக்கை!

சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!

சென்னை, ஏப்.3-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, நாகர்கோவில் மாநராட்சியில் சீரான குடிநீர் விநியோகம் குறித்து அமைச்சர் கே.என்.நேரு விளக்கமளித்தார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு குறிப்பிட்ட தாவது :-

நாகர்கோவில் மாநகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. நாகர்கோவில் மாநகராட்சியின் குடிநீர் தேவை மொத்தம் 46 MLD ஆகும். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள கூட்டுக் குடிநீர் திட்டம்மூலம் 41 MLD, உள்ளாட்சி அமைப்புகளின்மூலம் 5 MLD வழங்கப்படுகிறது. ஆக மொத்தம் நாகர்கோவில் மாநகராட்சிக்கு 46 MLD குடிநீர் தினந்தோறும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள நாகர்கோவில் மாநகராட்சிக்கென தனி குடிநீர்த் திட்டம் 30-4-2025-ல் முழுமையாக மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும். அப்படி ஒப்படைக்கப்படும்போது நீங்கள் சொன்னதுபோல் இல்லாமல் ஒரே சீரான விநியோகம் நடைபெறும் என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, உங்களுக்கு விவரம் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இப்போது தெரிவித்தேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

தென்னை நோய்க்கு மருந்தைக் கண்டுபிடித்து விவசாயிகளை அரசு காப்பாற்றும்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உறுதி!

சென்னை, ஏப்.3-

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் பொள்ளாச்சி வி.ஜெயராமன் தென்னை நோய் குறித்து பேசும்போது குறுக்கிட்டு பேசிய அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கண்டிப்பாக தென்னை நோய்க்கு மருந்தைக் கண்டுபிடித்து விவசாயிகளை இந்த அரசு காப்பாற்றும் என்று உறுதியுடன் குறிப்பிட்டார்.

இதுகுறித்து சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறுக்கிட்டு பேசியதாவது:

அவர் பேசிக்கொண்டிருக்கின்றார் பேசட்டும் என்றிருந்தேன். குற்றச்சாட்டில்லாமல் பேச வேண்டும். ஏனென்றால், அதை நாங்கள் கண்டுபிடிக்கவில்லை (குறுக்கீடு) இல்லை, இல்லை எல்லோருக்கும் அது உண்டுதான். ஆகவே, நீங்கள் ஆலோசனை சொல்லுங்கள். என்ன செய்தீர்கள் என்று கேட்கும்போது தான் கஷ்டமாகிறது. நீங்கள் அரசியலுக்கு போய்விடுகிறீர்கள். நீங்கள் கடந்த பத்தாண்டுக்காலம் என்ன செய்தீர்கள்? நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், எதையும் உடனே கண்டுபிடித்துவிட முடியாது. ஒரு RESEARCH என்றால், மூன்றாண்டுகள், நான்காண்டுகள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். இதுவெல்லாம் உறுப்பினர் அக்ரி. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரியும். ஒரு RESEARCH செய்து நோய்க்கான மருந்தை கண்டுபிடிக்க வேண்டுமென்றால், அதற்கான காலங்கள் தேவை. நீங்கள் பத்தாண்டு காலங்கள் ஆட்சியில் இருந்தபோது, அதை விட்டுவிட்டீர்கள். அப்போதுதான் வேகவாடலில் சில, பல பூச்சிகளால் பிரச்சினைகள் ஏற்பட்டன.

ஆகவே, அதேமுறையை, TECHNIC-ஐ கடந்த ஆறு மாதமாக தென்னை மரம் சம்பந்தமாக-தென்னைக்கென்று தனியாக எந்தவொரு திட்டமும் கிடையாது. இப்போதுதான் முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, கிட்டத்தட்ட 11 இலட்சம் எக்டேர் அளவிற்கு தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. தென்னை மரங்களை காப்பாற்ற வேண்டுமென்றுதான் கடந்த ஆண்டில் கூட பொள்ளாச்சி பகுதியிலே ஏற்பட்ட நிகழ்வுக்கு உடனடியாக முதலமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் அனுப்பி, அங்கேயுள்ள விஞ்ஞானிகள், அங்கேயுள்ள VC OF UNIVERSITY, அங்கேயுள்ள HORTICULTURE DEPARTMENT அதிகாரிகள், வேளாண் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து பொள்ளாச்சி, திருப்பூர் போன்ற பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்தையும் நேரடியாக களஆய்வு செய்து, எந்தெந்த மரத்தில் என்னென்ன பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று பார்த்து, அந்த மரங்களையெல்லாம் அப்புறப்படுத்தி, அதற்கென்று தனியாக ஒரு திட்டம் வகுத்து, முதலமைச்சர் அவர்கள் நேரடியாக சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு நலத் திட்டத்தை வழங்கினார்கள். எனவே, தீர்வுக்கான வழியை மேற்கொண்டு வருகிறோம். விவசாயத்தைப் பொறுத்தவரையில் உடனடியாக தீர்வு காண முடியாது. அதற்கான காலகட்டம் உண்டு. எல்லோருக்கும் இயற்கை இடர்பாடுகள் உள்ளன. அந்த இயற்கை இடர்பாடுகளை சந்தித்துதான் விவசாயிகள் வாழக்கூடிய ஒரு சூழ்நிலை. அதற்கான தற்காப்பு முறைகள் மேற்கொள்ளப்படும். அதற்குரிய உடனடி நிவாரணங் கள் மேற்கொண்டு விவசாயிகளை காப்பாற்றுகின்ற அரசாக நம்முடைய முதல்வர் அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, நல்ல ஆலோசனை கூறுங்கள். இப்படியெல்லாம் செய்ய வேண்டுமென்று, இப்படிச் செய்யுங்கள் என்று ஆலோசனை சொல்லுங்கள். ஆனால், சாதாரணமாக குற்றம் சுமத்தி பேசக் கூடாது. (குறுக்கீடு)

தென்னை மரம் உடனே வளர்ந்துவிடாது. குறைந்தது பத்தாண்டுக் காலம், இருபதாண்டுக் காலம், நாற்பதாண்டுக் காலம் என்று அதை கஷ்டப்பட்டு வளர்த்து, அது நோயுற்று வீணாகின்ற போது விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டம்தான். அதை உணர்ந்துதான் அதற்குரிய தடுப்பு நடவடிக்கைகள் என்று எதுவுமில்லை. இது உறுப்பினர் அக்ரி. கிருஷ்ணமூர்த்திக்குத் தெரியும். நாங்கள் என்ன செய்கிறோம் என்றால், UNIVERISTY ஆராய்ச்சியாளர்களை அழைத்து, ஆய்வுக் கூட்டம் நடத்தி, முறையாக RESEARCH செய்து தொடர் நிகழ்வாக, கண்டிப்பாக மருந்தைக் கண்டுபிடித்து விவசாயிகளை இந்த அரசு காப்பாற்றும் என்று சொல்கிறேன். முதலில் ஆலோசனைகள் கூறுங்கள். எப்படி செய்ய வேண்டும், என்ன செய்ய வேண்டுமென்று ஆலோசனைக் கொடுத்தால் நாங்கள் அதில் உள்ள நல்லதை நிச்சயம் எடுத்துக்கொள்வோம்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் குறிப்பிட்டார்.

நியாய விலைக் கடை அமைக்க

நகர்ப் பகுதிகளில் குறைந்த பட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஏப். 3 -

சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நகர்ப் பகுதிகளில் நியாய விலைக் கடை அமைக்க குறைந்த பட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இது குறித்து திண்டிவனம் தொகுதி, தானங்குப்பம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா? என்று அ.தி.மு.க. உறுப்பினர் பொ.அர்ஜுனன் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அளித்த பதில் வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், ஒங்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 834 குடும்ப அட்டைகளுடன் ஒங்கூர் முழுநேர நியாய விலைக் கடை செயல்படுகிறது. இக்கடையில் தானங்குப்பம் கிராமத்திலுள்ள 89 குடும்ப அட்டைதாரர்களும் பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இந்நிலையில் தானங்குப்பத்தில் தனியாக நியாய விலைக் கடை இல்லாத நிலையில், நியாய விலைக் கடைக்கு புதிதாக கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை .

தானங்குப்பத்திலேயே கடை வேண்டுமா? அங்கு 89 கார்டுகள் மட்டுமே உள்ளன. 89 கார்டுகளுக்காக ஒரு தனிக் கடையை அமைப்பதென்பது சற்று சிரமம். ஏற்கெனவே அதற்கென விதிகள் இருக்கின்றன. ஆனால், அந்தப் பகுதியில் பார்த்தோமானால், 48 கார்டுகளுக்குக்கூட ஒரு கடை இருக்கிறது.

குறிப்பாக, ஓங்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் ஓங்கூர் நியாய விலைக் கடை 834 குடும்ப அட்டைகளுடனும், கும்பூர் நியாய விலைக் கடை 339 குடும்ப அட்டைகளுடனும், பாதிரி நியாய விலைக் கடை 338 குடும்ப அட்டைகளுடனும், கச்சப்பட்டு நியாய விலைக் கடை 48 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. இதில் 48 கார்டுகளுக்குக்கூட ஒரு கடை இருக்கிறது. அது எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என்றால், முதலில் தாய்க் கடை ஆரம்பிக்கப்பட்டிருக்கும். பின்னர், பகுதி நேரக் கடைகள், புதிய கடைகள் கோரும்போது, அங்குள்ள கார்டுகளின் எண்ணிக்கை குறைந்து 48 கார்களுக்காக ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அதன் பிறகுதான், 2006 ஆம் ஆண்டில், புதிய அரசாணை எண் 147, நாள் 24-8-2006 வெளியிடப்பட்டு, அதில் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டு நடைமுறையிலுள்ளன.

அந்த அடிப்படையில் தான், நகரப் பகுதிகளில் குறைந்தபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; கிராமப் பகுதிகளில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; மலைப் பிரதேசங்களைப் பொறுத்தவரை 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று எண்ணிக்கை அளவிலும், தாய்க் கடைக்கும், அதிலிருந்து பிரிக்கப்படும் பகுதி நேரக் கடைக்கும் இடையே 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டும்; பிரிக்கப்படும் பகுதி நேரக் கடையில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; பிரித்த பின் தாய்க் கடையிலும் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என விதிமுறைகள் உள்ளன. இவ்வாறு விதிகள் இருக்கும்போது, அதற்கு எந்த வகையிலும் பொருந்தாத நிலையில், 89 குடும்ப அட்டைகளுக்காக ஒரு கடையைக் கேட்பதென்பது நியாயமாகத் தெரியவில்லை. இருப்பினும் உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

இதுவும் விதிகளைத் தளர்த்த வேண்டிய ஒரு கேள்வியாகத்தான் இருக்கிறது. ஏனெனில், கீழாத நூரில் மொத்தமே 387 கார்டுகள்தான் அங்கு இருக்கின்றன. அதிலே காலனி பகுதி, ஊர்ப் பகுதி என்று இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. ஊர்ப் பகுதியில் 90 கார்டுகள்தான் இருக்கின்றன. காலனி பகுதியில் 297 கார்டுகள் இருக்கின்றன. இப்போது இவர்கள் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து புதிதாக நியாய விலைக் கடை கட்டும்போது என்ன செய்திருக்கிறார்கள் என்றால், காலனி பகுதியில் 297 கார்டுகள் இருக்கிற காரணத்தால் அங்கு கட்டிவிட்டார்கள். அது நியாயம். ஆனால், இப்போது ஊர்க்காரர்கள் நாங்கள் அங்கே சென்று வாங்குவதா என்று கேட்கிறார்கள். இடைப்பட்ட தூரமும் 2 கிலோ மீட்டராக இருக்கிறது. எதிர்காலத்தில் மாவட்ட ஆட்சியர் அளவில், மாவட்ட அளவில் நீங்கள் முயற்சி செய்தால் விதிகளைத் தளர்த்தி செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பதிலளித்தார்.

மதுரவாயல் – சென்னை துறைமுகம் மேம்பாலப் பணிகள் :

குறிப்பிட்ட காலத்திற்குள் பாலம் அமைத்திட அரசு அத்தனை முயற்சிகளையும் எடுக்கும்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு விளக்கம்!

சென்னை, ஏப்.3-

சட்டப்பேரவையில் நேற்று - மதுரவாயல் - சென்னை துறைமுகம் மேம்பாலப் பணிகள் குறித்த விவாதத்திற்குப் பதிலளித்த பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, "மதுரவாயல் - சென்னை துறைமுகம் மேம்பாலப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்திட அரசு அத்தனை முயற்சியையும் எடுக்கும்" என்று குறிப்பிட்டார்.

அதன் விவரம் வருமாறு:

மதுரவாயல் - சென்னை துறைமுகம் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டியது குறித்து, சட்டப்பேரவையில் நேற்று, உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

அதற்கு பதிலளித்து பேரவையில் எ.வ.வேலு, அறிக்கை ஒன்றினை வைத்தார்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது :-

மதுரவாயல் துறைமுக மேம்பாலம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரையிலான புதிய இரண்டு அடுக்கு 4 வழி உயர்மட்ட சாலை அமைக்கும் பணி தே.நெ.4-ல் கி.மீ.0/342 முதல் கி.மீ. 20/593 வரை பகுதி I முதல் IV வரை

(கி.மீ. 0/342 முதல் கி.மீ. 20/593 வரை) EPC செயல்முறையில் ஒப்பந்த மதிப்பு ரூ.5,510 கோடிக்கு ஒப்பந்த உடன்படிக்கை 11-9-2023 அன்று மேற்கொள்ளப்பட்டு, பணி நியமனம் 23-11-2023 அன்று வழங்கப்பட்டது.

ஒப்பந்த உடன்படிக்கையின்படி இப்பணிகள் பிப்ரவரி 2027 இல் முடிக்கப்பட வேண்டும் இந்நேரில் நீர்வளத் துறையால் எழுப்பப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக 30-5-2024 அன்று தான் பணிக்கான சாலைப் பகுதி ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேலும், 15-9-2024 முதல் 31-12-2024 வரையிலான பருவமழைக் காலத்தில் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் உத்தரவின்படி பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக, திட்டமிட்டபடி பணிகள் நடைபெறவில்லை. மேற்கண்ட காரணங்களால் இப்பணியானது மேலும் காலதாமதத்துடன் நிறைவு பெறவாய்ப்பு உள்ளதாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய முன்னேற்றம்

இத்திட்டப் பணிகள் 4 தொகுப்புகளைக் கொண்டது. இப்பணிகளில் மொத்தமுள்ள 5,296 எண்ணிக்கையிலான PILES அமைக்கும் பணிகளில், 812 எண்ணிக்கை முடிவடைந்துள்ளது. மேலும் மொத்தமுள்ள 882 எண்ணிக்கையிலான PILECAP அமைக்கும் பணிகளில் 41 எண்ணிக்கை முடிவடைந்துள்ளது. மேலும் மேல் தளத்திற்குண்டான (SUPER STRUCTURE) பாகங்கள் தனியாக இரண்டு இடங்களில் (CASTING YARD) தயாரிக்கப்பட்டு வருகிறது. இதில் மொத்தம் 9,415 எண்ணிக்கையில், 14 எண்ணிக்கை முடிவடைந்து தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டதாவது :-

தமிழ்நாடு முதலமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்தபோது காங்கிரஸ் பேரியக்கம் டெல்லியிலே இருக்கிறபொழுதுதான் மன்மோகன் சிங் அவர்களை அழைத்து அந்தப் பாலம் துவக்கப்பட்டது. அதனால் 16 ஆண்டு காலம் கிடப்பிலே இருந்தது என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு முதல்வர் அவர்கள் டெல்லிக்கு சென்ற பொழுது, இந்தப் பாலத்தை மீண்டும் கட்ட வேண்டும் என்று பிரதமரிடத்திலும், நிதின் கட்கரி அவர்களிடத்திலும் நேரடியாக கடிதம் தந்தார்கள். ஒரு முறைக்கு இரண்டு முறை நானே நேரடியாக சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கடிதம் கொடுத்தது மட்டுமல்லாமல் வலியுறுத்தியும் இருக்கிறேன். அந்த அடிப்படையிலே தான் இந்தப் பாலம் மீண்டும் கட்டுகிற அந்த வாய்ப்பு கிடைத்தது. அதற்கு திட்ட மதிப்பீடு என்றால் 3,570 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒப்பந்தங்களெல்லாம் கோரப்பட்டு, MUMBAI-ஐ சேர்ந்த J KUMAR INFRAPROJECTS LTD. என்கிற ஒரு நிறுவனம் அதை எடுத்திருக்கிறது. இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உயர்மட்ட சாலை என்பது மொத்தம் 21 கிலோ மீட்டர். அந்தப் பாலம் இரண்டு பகுதியாக அமைகிறது. ஒன்று கீழ்பகுதி, இன்னொன்று மேல் பகுதி என்று இரண்டு அடுக்குள்ள மேம்பாலம். மேல் பகுதி என்பது மதுரவாயிலில் இருந்து புறப்பட்டு நேரடியாக துறைமுகத்திற்கு வந்துவிடும். அதில் எந்த இடையூறும் இருக்காது.

கீழ்ப் பாலங்கள் என்பது ஆறு இடங்களில் இறங்கு பாலங்களாகவும், ஏழு இடங்களில் ஏறு பாலங்களாகவும் அந்த DESIGN அமைந்திருக்கிறது. அந்தப் பணிகள் தற்போது துவங்கப்பட்டுள்ளன. அதோடுமட்டுமல்ல, இந்தப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களால் ஒன்றிய அராசங்கத்திடமிருந்து ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. மாநில அரசாங்கமும், ஒன்றிய அரசாங்கமும் ஒரு ஒப்பந்தம் போடுக்கொண்டது. ஒன்றிய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் அந்தப் பாலம் அமைக்கப்படுகிறது காரணத்தால், அதற்கு மாநில அரசாங்கம் என்னென்ன உதவிகளைச் செய்யலாம், அங்கு வேலை செய்வதற்குரிய YARD-களை கொடுப்பது, அவர்களுக்கு வேண்டிய நில எடுப்பை எடுத்து கொடுப்பது என்ற அடிப்படையில் பல்வேறு இனங்களில் ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அந்தப் பணிகள் விரைந்து நடக்க வேண்டும் என்பதற்காக துறையின் சார்பாக நானே நேரடியாக அவ்வப்போது, மாதத்திற்கு ஒரு முறை ஆய்வுக் கூட்டம் நடத்துகிறேன். தற்போது கூட, ஒரு மாத காலத்திற்கு முன்னாள் அரசு துறை, நெடுஞ்சாலைத் துறை, RO, தேசிய நெடுஞ்சாலை ஆணையம், நீர்வளத் துறை அதிகாரிகள், மின்வாரியத் துறை அதிகாரிகள், போக்குவரத்து காவல் துறை அதிகாரிகள், சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகள், நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு அதிகாரிகள், இந்திய கடற்படை அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரரை அழைத்து ஒரு கூட்டத்தை நான் தொடர்ந்து போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு கூட்டம் போடுகிற போது சில இடர்ப்பாடுகளை எல்லாம் சொன்னார்கள்.

குறிப்பாக, கூவம் ஆற்றிலே கிட்டத்தட்ட 15 கிலோ மீட்டர் தூரம் வரை அந்தப் பாலம் செல்கிறது. ஆனால், அதற்கு நீர்வளத் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டும். அதனால், அந்தத் துறையின் செயலாளர் அவர்களை அழைத்து, நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லி, NOC வாங்கி அந்தப் பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கூவம் ஆற்றங்கரையில் இருக்கும் பொது மக்களுக்கு வேறொரு இடத்தில் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு குடியிருப்பு ஏற்படுத்தித் தர வேண்டிய பணிகள் இருக்கின்றன. விரிவாக்கம் செய்யும் போது மின்கம்பங்களை அகற்றும் பணி, கட்டுமானப் பணிகளுக்கு இடையூறாக இருக்கிற போக்குவரத்துகளை மாற்றியமைப்பது,

இந்திய இராணுவத்திற்குச் சொந்தமான, கடற்படை குதிக்குச் சொந்தமான இடத்திற்குப் பதிலாக மாநில இடத்திற்குச் சொந்தமான வேறொரு இடத்தைக் கொடுத்துவிட்டு, அந்த இடத்தை இதற்காகப் பெறுவது என்று இப்படி பல்வேறு வகையிலான பணிகள், மாநில அரசு தொடர் ஆய்வுக் கூட்டம் நடத்தியதன் விளைவாக, 20-5-2026 வரை ஒப்பந்தம் இருக்கிறது. அவர்களுக்கு ஒப்பந்த காலம் என்பது 2026 வரை இருக்கிறது. சுமார் மூன்று ஆண்டு காலம் ஆகும். அந்தப்பணிகளைமுடிப்பதற்கு, தொடர்ந்து மாநில அரசாங்கம் ஒத்துழைப்பு செய்து, அந்தப் பாலத்தை விரைவாகக் கட்டுவதற்கு மாநில நெடுஞ்சாலைத் துறை முழு ஒத்துழைப்பு வழங்கும்.

தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி பெருக வேண்டுமென்ற அடிப்படையில்தான் வெளிநாட்டு மூலதனங்களை எல்லாம் தமிழ்நாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியில் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்ஈடுபட்டிருக்கிறார்கள். அவர் குறிப்பிட்டதை போல, தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற அந்தப் பொருட்களெல்லாம் இங்கே துறைமுகத்திற்கு வர வேண்டும் என்ற அடிப்படையில்தான் அந்தச் சாலைக்கு முக்கியத்துவம் தந்து, அந்தப் பணிகளை நாங்கள் மேற்கொண்டு ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தப் பாலம் அமைப்பதற்கு அரசு அத்தனை முயற்சியையும் எடுக்கும்.

இவ்வாறு பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு விளக்கமளித்தார்.

கன்னியாகுமரி தேவஸ்தானத் திருக்கோயில்களுக்கு

முதல்வர் இதுவரை ரூ.33 கோடி அரசு மானியமாக வழங்கியுள்ளார்!

சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஏப்.3-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (01.04.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திருநெல்வேலி சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார்.

நயினார் நாகேந்திரன் : நாகர்கோவில், நாகராஜா திருக்கோயிலுக்கு எப்போது குடமுழுக்கு நடத்தப்படும்? அந்த கோயிலின் திருக்குளம் சீரமைக்கப்படுமா?

அமைச்சர் பி.கே.சேகர்பாபு: உறுப்பினர் அவர்கள் கோரிய நாகர்கோவில், நாகராஜா திருக்கோயிலுக்கு ரூ.1.25 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் 60 சதவீத பணிகள் நிறைவுற்று இருக்கின்றன. பிரசனம் பார்த்து, ஆகஸ்ட் மாதம் குடமுழுக்கு நடத்துவதற்கு தேதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அத்திருக்கோயிலுக்கு ஆகஸ்ட் மாதத்தில் நிச்சயமாக குடமுழுக்கு நடத்தப்படும். மேலும், அவர் கோரிய திருக்குளப் பணிக்கு தற்போது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இரண்டு மாத காலத்திற்குள்ளாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும்.

உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இந்து சமய அறநிலையத்துறைக்கு நன்றி சொல்வார் என்று எதிர்ப்பார்த்தோம். கன்னியாகுமரி தேவஸ்தானத்தில் ஒட்டுமொத்தமாக 490 திருக்கோயில்கள் உள்ளன. கடந்த ஆட்சி காலத்தில் 2021-ஆம் ஆண்டு வரை அதற்கு ரூ.3 கோடி தான் அரசு மானியமாக வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, முதல்வர் அவர்கள் அதனை ரூ.13 கோடியாக உயர்த்தி இதுவரை 33 கோடி ரூபாய் அரசு மானியமாக கன்னியாகுமரி தேவஸ்தானத்திற்கு வழங்கியுள்ளார்.

பல திருக்கோயில்களில் தீபங்கள் கூட எரியாத சூழ்நிலை இருந்ததை, இன்றைக்கு ஒளி வெள்ளத்தில் இறைவன் இருப்பதற்கு காரணமான திராவிட மாடல் அரசுக்கு அவர் நன்றி சொல்லவில்லையே என்று ஒரு வருத்தம் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கோரிய அனைத்து கேள்விகளுக்கும் நிறைவு உண்டாகும்படி செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு விளக்கமளித்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, பாண்டி பஜாரில் உள்ள நடைபாதை வணிக வளாகத்தினை மேம்படுத்துவது குறித்து துணை மேயர் மு.மகேஷ் குமார் நேற்று (02.04.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் கே.ஏழுமலை, தலைமைப் பொறியாளர் (பூங்கா) டி.அன்பழகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.